DEPOSITION OF WITNESS

---

IN THE COURT OF SUBORDINATE JUDGE, DEVAKOTTAI.

| | | |
|---|---|---|
| MCOP.No. | : | 124/2017 |
| Deposition of Witness for | : | P.W.1 |
| | : | D.W. |
| | : | R.W. |
| | : | Court. |
| Name | : | ஜான் பிரிட்டோ |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 19.06.2025

**முதல் விசாரணை:**

நான் மனுதாரர். நான் இத்துடன் தாக்கல் செய்துள்ள நிரூபணவாக்குமூலத்தை முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். எனது தரப்பு கீழ்கண்ட ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

1. 25.01.2019 ம் தேதியிட்ட மனுதாரர் தகவல் அறியும் உரிமைச்சட்டப்படி பெறப்பட்ட கடிதம் நகல் **ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2. 10.09.2017 ம் தேதியிட்ட பிரேத பரிசோதனை அறிக்கை உண்மை நகல் **ம.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

3. 10.09.2017 ம் தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை உண்மை நகல் **ம.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

4. 24.11.2016 ம் தேதியிட்ட இன்சூரன்ஸ் பாலிசி உண்மை நகல் **ம.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

5.10.09.2017 ம் தேதியிட்ட குற்ற அறிக்கை உண்மை நகல் **ம.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

6. 21.09.2015 ம் தேதியிட்ட ஆர்சி புக் உண்மை நகல் **ம.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**குறுக்கு விசாரணை:**

1. விபத்தில் இறந்த ரோசாலின் வசந்தா என்பவர் என் மனைவி என்றால் சரிதான். 2, 3 மனுதாரர்கள் யார்யார் என்றால் 2 ம் மனுதாரர் என் மகன், 3 வது மனுதாரர் என் மகள் ஆவார்கள். என் மனைவி இறக்கும் முன்பு அவர்களுக்கு திருமணம் ஆகிவிட்டதா என்றால் இல்லை. விபத்தின்போது என் மனைவி யாருடைய வாகனத்தில் உடன் சென்றார் என்றால் சகாயமேரி வாகனத்தில் சென்றால். அவர் சென்ற வாகனத்தின் பதிவு எண் தெரியுமா என்றால் தெரியாது.

2. என் மனைவிதான் விபத்தின்போது வாகனத்தில் சரியாக பிடித்துக்கொண்டு உட்கார்ந்து செல்லாமல் தவறி விழுந்து தானாகவே விபத்தை ஏற்படுத்திக் கொண்டார் என்று சொன்னால் சரியல்ல. விபத்தின்போது சகாயமேரி தகுந்த சாலைவிதிகளை பயன்படுத்திக் கொண்டு மெதுவாகத்தான் வாகனத்தை ஓட்டினார் என்றும், விபத்து அவரது கவனக்குறைவால் நடக்கவில்லை என்றும், எனவே காப்பீட்டு நிறுவனம் இழப்பிட்டு தொகை கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்று சொன்னால் சரியல்ல. நான் சொல்லுவது போல் சகாயமேரியின் கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டிருந்தால் கூட விபத்தின்போது மேற்படி சகாயமேரிக்கு தகுந்த ஓட்டுநர் உரிமம் இல்லை என்பதால் காப்பீட்டு நிறுவனம் எவ்வித இழப்பீடும் கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்று சொன்னால் சரியல்ல.

3. என் மனைவி விபத்திற்கு முன்பாக தையல் தொழில் செய்துவந்தார் என்றும், அதை நிரூபிப்பதற்கு எந்தவித ஆவணங்களும் தாக்கல் செய்துளேனா என்றால் இல்லை. என் மனைவியின் இறப்பிற்காக நான் கோரியுள்ள இழப்பீடு மிக அதிகம் என்றும், அதனால்

நான் கோரியுள்ள இழப்பீட்டுத் தொகை எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. 2, 3 மனுதாரர்களை பொறுத்தவரையில் இந்த மனுவானது அவர்களது செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யக்கூடியது என்று சொன்னால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS

---

IN THE COURT OF SUBORDINATE JUDGE, DEVAKOTTAI.

| | | |
|---|---|---|
| MCOP.No. | : | 124/2017 |
| Deposition of Witness for | : | P.W.2 |
| | : | D.W. |
| | : | R.W. |
| | : | Court. |
| Name | : | ஜான் ஆனந்தராஜ் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 19.06.2025

**முதல் விசாரணை:**

நான் மனுதாரர் தரப்பு 2ம் சாட்சியாவேன். நான் இத்துடன் தாக்கல் செய்துள்ள நிரூபணவாக்குமூலத்தை முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான்.

**குறுக்கு விசாரணை:**

1. இறந்துவிட்ட ரோசிலின் வசந்த எந்த ஊரைச் சேர்ந்தவர் என்றால் அவர் எங்க உரைச் சேர்ந்தவர், அதனால் எனக்குத் தெரியும். எனது உறவினரா என்றால் ஆமாம். சகாயமேரி ஓட்டிச் சென்ற வாகனத்திற்கு பின்னால் நான் எவ்வளவு தூரத்திற்கு பின்னால் வந்தேன் என்றால் சுமார் 100 அடி பின்னால் வந்தேன். நான் எந்த வாகனத்தில் சென்றேன் என்றால் டிவிஎஸ் எக்சல் வாகனத்தில் சென்றேன். நான் சாலை விதிகளை கடைபிடித்து வாகனத்தை ஓட்டிச் சென்றேன் என்றால் ஆமாம். ரோசிலின் வசந்த வாகனத்தில் இருந்து

கிழே விழுந்தவுடனே அவரை சென்று பார்த்தேனா என்றால் அவர் கீழே விழுந்தவுடனே சென்று பார்த்தேன்.

2. நான் சென்று பார்த்தபோது அவர் எந்த நிலையில் இருந்தார் என்றால் பேச்சு மூச்சின்றி மயக்க நிலையில் கிடந்தார். இறந்து விட்ட ரோசிலின் வசந்தா விபத்தின்போது வாகனத்தை பிடித்துக்கொண்டு அமர்ந்திருந்தாரா என்ற விபரம் எனக்குத் தெரியுமா என்றால் தெரியாது. அதேபோன்று அவர் இயல்பாக மயக்கம் வந்து விழுந்தாரா என்ற விபரம் எனக்குத் தெரியுமா என்றால் எனக்குத் தெரியாது. எனக்கு எதனால் விபத்து எற்பட்டது என்ற விபரம் தெரியாது என்றால் சரிதான்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஒம்)– திருமதி.P.கலை நிலா, M.L.,
சார்பு நீதிபதி,
தேவகோட்டை.